செ.வெ.எண்-49 நாள்-19.11.2019

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் அனைத்து அரசுத் துறை அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் ஆட்சிமொழிப் பயிலரங்கம், ஆட்சிமொழிக் கருத்தரங்கம் 26.11.2019 மற்றும் 27.11.2019 ஆகிய இரு நாள்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

ஆட்சிமொழிப் பயிலரங்கம், கருத்தரங்கம் 26.11.2019 மற்றும் 27.11.2019 ஆகிய இரண்டு நாள்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நடைபெறுகிறது. 27.11.2019 பிற்பகல் 3.30 மணி முதல் ஆட்சிமொழிக் கருத்தரங்கம் தமிழ் வளர்ச்சி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலரின் பயிலரங்கத் தொடக்க உரையைத் தொடர்ந்து பயிரலங்கில் ஆட்சிமொழி வரலாறு சட்டம், ஆட்சிமொழிச் செயலாக்க அரசாணைகள், மொழிபெயர்ப்பு கலைச்சொல்லாக்கம், அலுவலகக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் தயாரித்தல், மொழிப்பயிற்சி, ஆட்சிமொழி ஆய்வும் குறைகளைவு நடவடிக்கைகளும் ஆகிய ஆறு தலைப்புகளில் தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் பயிற்சி அளிக்கவுள்ளார்கள்.

27.11.2019 பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கில் மாவட்ட ஆட்சியர் தலைமையுரையாற்றவும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க விளக்கவுரை ஆற்றவும் உள்ளனர். ஆட்சிமொழிக் கருத்தரங்கம் குறித்து அரசு அலுவலர்கள், தமிழறிஞர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர்.

அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழிச் செயலாக்கத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசு அலுவலர்கள், பணியாளர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.இந்நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அவர்கள் செயல்படுவார் என மாவட்ட ஆட்சியர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**